# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1852/35 - 2014 මාර්තු මස 05 වැනි බදාදා - 2014.03.05

*1852/35 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 9/2011.*

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*அரசிலயமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதும் மற்றும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதுமான சட்டத்தின் 72 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்படும் ஆதனத்தை இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதியிலிருந்து பயனுக்கு வருமாறு 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு உரித்தாக்குகின்றேன்.*

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதிச் செயலகம்,
கொழும்பு 01,
2014, மாச்சு 05.

**அட்டவணை**

1. வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பிரிவில் கட்டைவேலிக் கோயில் பற்றுவில் கரவெட்டி குருளிக்குறிச்சியில் அமைந்துள்ளதும், "பழனியாவத்தை" என்றழைக்கப்படுவதும், விஸ்தீரணத்தில் 22 1/4 நிலப் பரப்புக் கொண்டதும், சொல்லப்பட்ட விஸ்தீரணத்தில் 22 1/4 நிலப்பரப்புக் கொண்ட காணியில் வடக்குப் பக்கத்தில் விஸ்தீரணத்தில் 7 1/4 நிலப்பரப்புக் கொண்ட காணி, இதிலிருந்து வடக்குப் : பக்கமாக விஸ்தீரணத்தில் 3 5/8 நிலப்பரப்பு (0ஏ. 0றூ. 33.75 பே.) கொண்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள்- கிழக்கில் கந்தவனம் முருகேசு மற்றும் ஏனையோரின் ஆதனம் ; வடக்கில் : (பொன்னையாவின் கைம்பெண்) செல்லாச்சி மற்றும் ஏனையோரின் ஆதனம்; மேற்கில் : நமசிவாயத்தின் மனைவி சின்னத்தங்கம் மற்றும் ஏனையோரின் ஆதனம் ; அத்துடன் தெற்கில்: சின்னத்தம்பி மயில்வாகனம் மற்றும் ஏனையோரின் ஆதனம் ; இத்துடன் மந்தியொல்லை எனவழைக்கப்படும் மேற்குப் : பக்கக் காணியிலுள்ள கிணற்றிற்குரிய பங்கும் மற்றும் வழி வாய்க்கால் பாவித்துரித்தும் அடங்கலாக.

இக்காணி, பருத்தித்துறைக் காணிப் பதிவகத்தில் பக்கம் ஏ 441/148 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டிக் கோறளை, பள்ளேபத்துவில் மஹரகம பிரதேச சபை எல்லைகளினுள் மஹரகம நகர சபைப் பிரிவில் தேபானம கிராமத்தில் பன்னிப்பிட்டியவில் பத்தரமுல்லை வீதியில் அமைந்துள்ளதும், "மாரகஹாவத்த மற்றும் கொரக்காகஹாவத்த" என்று அழைக்கப்படும் காணியில் காணித்துண்டு இல. 1 ஏ இன் எஞ்சியுள்ள பாகம் என அடையாளமிடப்பட்டதும், பிரிவிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான இக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள்:- வடக்கில் : கே. வில்லியம் பெரேராவுக்குச் சொந்தமான காணி ; கிழக்கில் : பத்தரமுல்லையிலிருந்து பன்னிப்பிட்டியாவிற்குச் செல்லும் வீதி ; தெற்கில்: காணித்துண்டு இல. ஏ 2 (5 அடி அகலமான வீதி ஒதுக்கிடம்) மற்றும் மேற்கில் : முன்னர் விற்கப்பட்ட காணி ; இது மரங்கள், பயிர்கள், வீடு மற்றும் வேறெல்லாம் உள்ளடங்கலாக விஸ்தீரணத்தில் ஏழொடு எண்பத்தெட்டின் கீழ் நூறு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 7 88/100 பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.*

*இக்காணி, கொழும்பு காணிப் பதிவகத்தில் பக்கம் எம் 1685/251, 252, 219 என்பவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*அண்மைக்காலத்திய நிலஅளவையொன்றின்படி சொல்லப்பட்ட காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-*

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டிக் கோறளை, பள்ளே பத்துவில் மஹரகம பிரதேச சபை எல்லைகளினுள் மஹரகம நகரசபைப் பிரிவில் தேபானம கிராமத்தில் பன்னிப்பிட்டியவில் பத்தரமுல்லை வீதியில் அமைந்துள்ளதும், "மாரகஹாவத்த மற்றும் கொரக்காகஹாவத்த" என்று அழைக்கப்படுவதுமான காணியில் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. பீலிக்ஸ் டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997.10.26 ஆந் திகதிய 197ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டு இல. ஏ 1 இன் பாகத்தின் காணித்துண்டு ஏ 1 ஏ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் :- வடக்கில் : கே. வில்லியம் பெரேராவுக்குச் சொந்தமான காணி ; கிழக்கில் : பன்னிப்பிட்டியாவிலிருந்து பத்தரமுல்லைக்குச் செல்லும் பிரதான வீதி ; தெற்கில் : 197 ஆம் இலக்க, வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டு இல. ஏ 2 (வீதி ஒதுக்கீடு) மற்றும் மேற்கில் : 197 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டு இல. ஏ 1 இன் எஞ்சியுள்ள பாகம் ; இது, அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் வேறெல்லாமுள்ளடங்கலாக விஸ்தீரணத்தில் ஏழு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 7 பே.) கொண்டுள்ளது.*

*3. "விதானலாகே வத்த பிட்ட கட்டிய" என்றழைக்கப்படுவதும், மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் பஸ்துன்கோறளை கிழக்கின் கங்கபட பத்துவில் புளத்சிங்களவில் அமைந்துள்ளதுமான காணியிலிருந்து பிரிக்கப்படாத ஓரரைவாசிப் பங்கிலிருந்து ஓரரைவாசிப் பங்கு (1/2 இலிருந்து 1/2) அடங்கலும் ; இது, அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் வேறெல்லாமுள்ளடங்கலாக விஸ்தீரணத்தில் ஓர் ஏக்கர் மூன்று றூட் இருபத்தைந்து பேர்ச்சுகளை (1ஏ. 3றூ. 25பே.) விஸ்தீரணத்தைக் கொண்டதுடன் பின்வரும் எல்லைகளையுமுடையது. வடக்கில் : கிராமவாசிகளினால் உரிமைகோரப்பட்ட காணி ; கிழக்கில் : 313842 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் மற்றும் 15842 ஆம் இலக்கப் பூர்வாங்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டு இலக்கம் : 6648 உடையதுமான காணி ; தெற்கில் : முடிக்குரிய காணி மற்றும் மேற்கில் : 280762 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணி.*

*இக்காணி, மத்துகம காணிப்பதிவத்தில் பக்கம் ட 159/246, 267 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*3- 737*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.